# C.S.I TAMIL CHURCH - OMAN

# "பாலைவன மன்னா"




**மன்னா – 9 நவம்பர் 2019 பிரதி – 8**



# ஆயர் மடல்



நிறைவாழ்வு அருளும் இறை இயேசுவின் இனிய திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

பண்டிகை நாட்களின் ஆயத்த மாதத்திற்கும், ஆண்டு விழாக்களின் துவக்க காலங்களிலும் காலடி எடுத்து வைத்துள்ளோம். நவம்பர் மாதம் என்று கூறும்போதே கிறிஸ்து பிறப்பு பண்டிகைக் காலத்தை நெருங்கிவிட்டோம் என்னும் உணர்வு நம்மை மேலிடுகிறது. இந்த புத்துணர்வோடு புதிய மாதத்திற்குள் பிரவேசிப்போம்.

**சிறப்பு நாட்கள்:-** நவம்பர் 1-ம் தேதி பெண்கள் ஞாயிறாக ஆசரிக்கிறோம். பெண்கள் சங்க அங்கத்தினர்கள் இத்தொழுகையை பொறுப்பெடுத்து சிறப்பாய் செயல்படுத்துகின்றனர்.

நவம்பர் 8-ம் தேதி ஆண்கள் சங்க விற்பனை விழாவாக அனுசரிக்கிறோம். இதற்கான பொறுப்பை ஆண்கள் சங்க பொறுப்பாளர்கள் சிறப்பாக கவனித்து வருகிறார்கள்.

நவம்பர் மாதம் 22-ம் தேதி பெண்கள் சங்க ஆண்டுவிழாவையும், 29-ம் தேதி திருமறைப்பள்ளி ஆண்டுவிழாவையும் கண்டுகளிக்க உள்ளோம். தியானமுகாம் மற்றும் கிறிஸ்துபிறப்பு பாடல் பவனி ஆகியவைவையயும் நாம் நடத்தவுள்ளோம். எனவே உற்சாகத்தோடும், பொறுப்புணர்வோடும் சபைசார்ந்த அனைத்து நிகழ்வுகளிலும் பங்கெடுக்க அன்பாய் கேட்கிறேன்.

**சிந்தனையின் நாட்கள்:-** வாழ்வில் நெருக்கடி வரும்போது அதிகமாக ஆண்டவரண்டை நெருங்குவோம். பணநெருக்கடி வரும்போது பரமன்பாதம் பற்றிக்கொள்வோம். இதுபோல நம்மை ஆண்டவரின் கரங்களில் அர்ப்பணித்து நடந்துகொள்ளவேண்டிய நாட்களாக இந்நாட்களை நான் காண்கிறேன். பணிவு, தெளிவு, துணிவு இவை வரிசையாக நம்மிடம் உருவாவதற்கு நம்மை இறையவரின் கரங்களில் ஒப்படைப்போம். நமது சிந்தனைகளில் இத்தகைய பண்புகள் வளருமாயின் இம்மாத கருப்பொருளான நிறைவான வாழ்வு நம்மில் உருவாகும். நிறைவான ஆசி நம் வாழ்வில் பெருகும்.

நவம்பர் மாத நல்வாழ்த்துக்கள் உங்கள் மேலும் உங்கள் குடும்பங்கள் மேலும் நிறைவாய் நிலைத்திருப்பதாக.

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

# ஆயர் அருளுரை

## உங்கள் குறைவையெல்லாம் இயேசு நிறைவாக்குவார்

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி, உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் (பிலி. 4:19).

கடந்த 10 மாதங்கள் கண்ணின் மணிபோல நம்மை பாதுகாத்து, புதிய மாதமாகிய நவம்பர் மாதத்தைக் காணச்செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். குறைவுகளின் மத்தியில் நிறைவாய் நம்மை நடத்திய தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம். இந்த உலகத்தில் குறைவில்லாத மனிதன் ஒருவனும் இல்லை. ஒவ்வொருவருக்கும் ஏதாவது குறை, வீட்டிற்கு வீடு வாசற்படி என்பார்கள். ஏழைக்கு ஆகார குறைவு, செல்வந்தனுக்கு ஆரோக்கிய குறைவு, உங்களுடைய எல்லா குறைவுகளின் மத்தியிலும், கர்த்தரில் சார்ந்து கொள்வீர்களானால் உங்களுடைய குறைவுகளெல்லாம் நிறைவாகும். நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம் (1கொரி.13:10). சாத்தான் எப்பொழுதும் குறைகளையும், தடைகளையும் கொண்டுவந்து மனமடிவாக்க விரும்புவான். ஆனால் ஆண்டவரோ கிருபையில் ஐசுவரியமாயிருந்து, உங்களுடைய குறைவையெல்லாம் நிறைவாக்கி, சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் நிறைவாக்குவார். இரட்சிப்பின் சந்தோஷத்தையும், பரிசுத்த ஆவியின் வல்லமையையும் உங்களுக்குக் கட்டளையிடுவார்.

### 1. வருகையில் நிறைவு:-



கலிலேயாவிலுள்ள கானா ஊரில் ஒரு திருமணம் நடந்தது. இயேசுவும், அவருடைய சீஷர்களும் அந்த திருமணத்திற்கு அழைக்கப் பட்டிருந்தார்கள் (யோவான் 2:1,2). திருமண இல்லத்திற்கு அழைப்பு உறவினர்களுக்கு, உயர்ந்தோர்களுக்கு, உடன் நண்பர்களுக்கு என அநேகருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும். இயேசு கிறிஸ்துவுக்கும், சீஷருக்கும் கொடுக்கப்பட்டிருந்த அழைப்பை தமது வருகையால் நிறைவு செய்தார் ஆண்டவர். தமது வருகையால் அழைப்பை நிறைவு செய்து ஆசி வழங்கினார்.

கிறிஸ்து இயேசுவை நாம் வருந்தி அழைக்க கற்றுக்கொள்ளவேண்டும். எங்கெல்லாம் இயேசுவே வாரும், தாவீதின் குமாரனே வாரும் என வருந்தி அழைத்தார்களோ அங்கெல்லாம் தமது வருகையால் நிறைவருளும் ஆண்டவரைக் கண்டுக்கொள்ளமுடிகிறது. கிறிஸ்து இயேசுவின் மரணத்திற்குப்பின் பின்மாற்றம் அடைந்து சென்ற சீஷர்களோடு பயணித்த

ஆண்டவரை வருந்தி தங்களோடு இருக்கும்படி சீஷர்கள் அழைத்தனர் (லூக்கா 24:29) "அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார்" என திருமறை கற்றுத்தருகிறது. நமது வாழ்வை நிறைவாக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவை வருந்தி அழைத்து நிறைவுபெறுவோம்.

## 2. வார்த்தையில் நிறைவு:-

ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது (யோவான் 1:1) எனும் வார்த்தையில் நிறைவு கிறிஸ்துவில் பூரணப்பட்டது. இந்த வார்த்தையின் வல்லமையை அன்னை மரியாள் அறிந்திருந்தார். எனவே கானாவூர் திருமண இல்லத்தின் திராட்சை ரசக்குறைவை நிறைவாக்க வேலைக்காரர்களுக்கு ஆலோசனை கூறுகின்றார். "அவர் உங்களுக்கு என்ன சொல்கிறாரோ அதன்படிச் செய்யுங்கள்" (யோவான் 2:5) என்று.

நம்முடைய வாழ்வில் இயேசுவின் வார்த்தையின் பூரணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அன்னைமரியின் ஆலோசனைப்படி இயேசுவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். திருமறைமூலமாக, திருத்தொண்டர்கள் மூலமாக நாம் பெறும் இறை ஆலோசனை பல. ஆனால் நாம் ஒரு காதில் வாங்கி, மதிப்பெண் இட்டு, மறுகாது வழியாக வெளியேவிட்டு விடுகிறோம். ஆனால் அவைகளைச் செய்கிறவன் எவனோ அவன் 'கற்பாறையின் மீது தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனைப்போல' இருப்பான் என திருமறை கூறுகிறது.

வேலைக்காரர்கள் ஜாடிகளில் தண்ணீர் நிரப்பினார்கள். அங்கே அற்புதம் நடந்தது. நிறைவு உருவானது. கீழ்ப்படிந்து நிறைவு பெறுவோம்.

## 3. வாழ்வில் நிறைவு:-

'திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர்' என்று சொல்வது உண்டு. யூதர்களின் திருமணச் சடங்குகளில் மிக முக்கியத்துவம் பெறுவது திராட்சை ரசம். திருமண இல்லத்தில் திராட்சை ரசக்குறைவு முழு திருமண இல்லத்தையும் அசைவுக்காணச் செய்துவிடும். இச்சூழலில் பதறுகின்ற இயேசுவின் தாய், செய்வதறியாது திகைக்கின்ற வேலைக்காரர்கள் மத்தியில் நிறைவுதரும் ஆண்டவரின் அற்புதம். "நீங்கள் இப்பொழுது மொண்டு பந்தி விசாரிப்புக்காரனிடத்தில் கொண்டுபோங்கள்" என்னும் அற்புத ஆண்டவரின் ஆற்றலின் நிறைவு மணவிருந்தின் சந்தோஷத்தை இரட்டிப்பாக்கியது.

"எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சை ரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு, ருசி குறைந்ததைக் கொடுப்பான். நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான் (யோவான் 2:10).

மனிதனால் உருவாக்கப்பட்ட ரசத்தின் சுவையைக் காட்டிலும் ஆண்டவரால் உருவாக்கப்பட்ட ரசத்தின் இனிமை பலமடங்காக உயர்ந்தது. நமது வாழ்வின் பகுதிகளிலும் நிறைவுபெற இறையவரை நாடுவோம்.

மனிதனுக்கு ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று பகுதிகள் இருக்கின்றன. கர்த்தரோ இந்த மூன்றிலும், எந்தக் குறைவுகள் இருந்தாலும், அவைகளையெல்லாம் நிவிர்த்தி செய்ய ஆவலோடிருக்கிறார். சிலருக்கு தீராத நோய்கள், சிலருடைய வாழ்க்கையில் மிகுதியான சாபங்கள், சிலருக்கு பிசாசு பிடிகள், எதுவாக இருந்தாலும், கிறிஸ்து தமது அன்பின்படியும், கிருபையின்படியும், மனதுருக்கத்தின்படியும் அற்புதம் செய்து குறைவுகளையெல்லாம் நிவிர்த்தி செய்வார். உங்களுடைய ஆத்துமாவிலே நிம்மதியில்லையா? உங்களுடைய ஆத்துமா சோர்ந்துபோனதா? நிம்மதியில்லாமல், இளைப்பாறுதல் இல்லாமல் தவிக்கிறீர்களா? தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி, உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் (பிலி. 4:19) என்ற வசனத்தின்படி இந்த புதிய மாதத்தில் தேவன் உங்களைத்தொட்டு குணமாக்கி உங்களுடைய குறைவுகளையெல்லாம் நிறைவாக்குவாராக.

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

## நிகழ்வும் - பாடமும்

## Dr. A.P.J அப்துல்கலாமின் அறிவுமொழிகள்



- ❖ நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்; ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்கவேண்டும்.
- ❖ ஒருமுறை வந்தால் அது கனவு; இருமுறை வந்தால் அது ஆசை; பலமுறை வந்தால் அது இலட்சியம்
- ❖ கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே, அது உன்னை கொன்று விடும்; கண்ணை திறந்துபார், நீ அதை வென்றுவிடலாம்.
- ❖ சிந்திக்க தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை.
- ❖ புதுமைகளை உண்டாக்கும் எண்ணங்களுக்கு ஒரு தூண்டு சக்தியாக இருப்பது பிரார்த்தனையே!

# சிறுகதை

## குதிரை

ஒரு மனிதர் ஒரு குதிரையை பாசமாக வளர்த்து வந்தார். அந்தக் குதிரை தன் எஜமான் சொல்வதைக் கேட்டு அவருக்கு உதவியாக இருந்து வந்தது. ஒரு நாள் அது பின்னால் இருந்த வேலியை எட்டி உதைத்ததினால் அதன் கால்களில் புண் உண்டானது. அதைக் கண்ட அந்த மனிதர் அதற்கு மருந்துபோட்டு, காயத்தைக் கட்டிவிட்டார். ஆனால் அந்த குதிரையால் சரியாக நடக்க முடியவில்லை. ஆகையால் ஒரு மிருக மருத்துவரிடம் போய் அந்தக் குதிரையை காட்டினார். அவர் அந்த குதிரையை பரிசோதித்துவிட்டு, அதற்கு புண் ஆறுவதற்கான மருந்தை கொடுத்தார். அதை சாப்பிடும் நேரத்தில் அந்த குதிரை நன்றாக நடந்தது. ஆனால் மருந்தை நிறுத்தினால், பின் திரும்பவும் நடக்க முடியாமல் போனது. அந்த மனிதர் திரும்பவும் அந்த மருந்தை கொடுத்தார். அதைச் சாப்பிட்ட குதிரை நடந்தது. பின் திரும்ப பழையபடி நொண்டி நொண்டி நடக்க ஆரம்பித்தது. அந்த மனிதர் அந்த குதிரையை நேசித்ததால் மீண்டும் அதை மருத்துவரிடம் கொண்டுபோய் காண்பித்தார். அந்த வைத்தியர் மயக்கமருந்து கொடுத்து, அந்த காலை சரியாக பரிசோதித்து பார்த்தபோது, அந்த காலுக்குள், ஒரு இரும்பு கம்பி உள்ளே இருப்பதைக் கண்டார். அந்த குதிரை ஆண்டிபயாடிக் (Antibiotic) என்னும் கிருமி தடுப்பு மருந்தை சாப்பிடும் நேரம் சுகமாக இருந்தது. பின் அது மீண்டும் பழைய நிலைப்படி நொண்டி நொண்டி நடந்தது. அந்த இரும்பு கம்பியை எடுத்து, சரியான மருந்து இட்டபோது, அந்த குதிரை குணமாகி நன்கு நடக்க ஆரம்பித்தது.

நம்முடைய இருதயத்திற்குள்ளும் பாவத்தின் வேர் உள்ளே ஆழமாக பதிந்து வைக்கப்பட்டிருக்கிறது. நாம் கர்த்தருடைய வசனத்தைக் கேட்கும்போது, பாவத்திலிருந்து நாம் அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்றுவிட்டோம் என்று நினைத்துக்கொள்கிறோம். ஆனாலும் திரும்ப திரும்ப நாம் ஏன் பாவம் செய்து அதில் விழுந்துகொண்டிருக்கிறோம்? நாம் கர்த்தரிடம் வந்து அவரிடம் மன்னிப்பை பெற்றது உண்மைதான். ஆனாலும் அடுத்தமுறை வரும்போது நாம் பரிசுத்தமுள்ளவர்களாய் இருப்பதில்லை. ஏதாவது பாவத்தில் விழுந்தவர்களாகவே காணப்படுகிறோம். ஏனெனில் பாவ சுபாவம் நமக்குள் வேர்விட்டு ஆழ பதிந்திருப்பதால்தான். ஆகையால் தான் நம்முடைய சில கூட பிறந்த சுபாவங்கள் நாம் மறுபடியும் பிறந்தாலும் நம்மை விட்டு மாறிபோவதில்லை.

**யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும், எச்சரிக்கையாயிருங்கள் (எபிரெயர் 12:16)**

**அன்புடன் போதகர்**

# பெண்கள் பகுதி

## சம்பூரணமாய் கொடுக்கிறவர் இயேசு

“உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்” (யாக்கோபு 1:5).

நன்றாக படித்து மதிப்பெண் எடுத்தவர்களை இந்த உலகம் ஞானவான் என்று சொல்கிறது. ஒரு சில வேலைகளை நன்றாய் செய்பவர்களை புத்திமான் என்கிறார்கள். பள்ளியில் படித்தபொழுது நம்மை யாருமே ஞானவான் என்றோ அல்லது புத்திமான் என்றோ யாரும் பாராட்டியது இல்லை. ஆயினும் இந்த உலகத்தில் ஆசீர்வாதமான வாழ்வினை வாழ முடிகின்றது. இதற்கு காரணம் பரிசுத்த வேதாகமம் நமக்கு நல்ல ஒழுக்கத்தைக் கற்றுத் தந்துள்ளது. இயேசுவின் முன்மாதிரியான வாழ்க்கை எனக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. பள்ளிப் பருவத்தில் என்னை ஞானவான் என்றோ அல்லது புத்திமான் என்றோ பாராட்டவிட்டாலும் இன்றைக்கு அநேகர் ஞானவான் என்றும் புத்திமான் என்றும் கூறுகின்றார்கள். இந்த ஞானமும் புத்தியும் எங்கிருந்து வந்தது?

வேதாகமம் தெளிவாகக் கூறுகின்றது. “ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி” (யோபு 28:28). நீங்கள் ஒருவேளை உங்களை ஞானம் அற்றவர்களாக நினைக்கலாம். நமக்கு “அறிவை உணர்த்த உம்முடைய நல்ல ஆவியைக் கட்டளையிட்டீர்” (நெகேமியா 9:20). மாணவர்களுக்கும் நமக்கும் அறிவை உணர்த்தும்படியாக பரிசுத்த ஆவியானவர் இருக்கின்றார்.

### 1. தானியேலின் ஞானம்:-

“தானியேலை சகல தரிசனங்களையும், சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்” (தானியேல் 1:17).

தானியேல் கர்த்தரால் அறிவாளியாக்கப்பட்டான் என்றால் அதற்கு தானியேலின் செயல்பாடு முக்கியமானதாக உள்ளது. ‘தானியேல், ராஜாவின் போஜனத்தினாலும், அவர் பானம்பண்ணும் திராட்சை ரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று தன் இருதயத்திலே தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்’ (தானி. 1:8).

தன்னைத் தீட்டுப்படுத்தாத தானியேலை கர்த்தர் தனக்கு உகந்தவனாய், அறிவாளியாய் மாற்றினார். வாழ்வில் அவன் சந்தித்த கடின அனுபவங்களிலும் கர்த்தரை உடனிருக்கச் செய்தது. வாழ்வில் அவன் கர்த்தரை மகிமைப்படுத்துகிறவனாய் மாறினான். தன்னை மட்டுமல்லாது தன் தேசத்தையும் கர்த்தருடைய தேசமாய் மாற்றினான் எனத் தானியேல் 6:25,26-ல் "என் ராஜ்ஜியத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கி பயப்பட வேண்டுமென்று தீர்மானம் பண்ணப்படுகிறது"

"தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது"

## 2. யோசேப்பின் ஞானம்:-

"கர்த்தர் யோசேப்போடே இருந்தார்; அவன் காரிய சித்தியுள்ளவனானான்" (ஆதி. 39:2).

யோசேப்பு காரிய சித்தியுள்ளவனாய், ஞானவானாய் இருக்க காரணம் என்ன என அவன் வாழ்வை தியானிக்கும்போது கர்த்தருக்குப் பயந்து, கர்த்தருக்கே கீழ்ப்படிகிறவனாய் இருந்தான்.

கர்த்தருக்கு பயப்படுகிற பயம் ஒரு மனிதனை ஞானவானாக மாற்றும் என்பதற்கு யோசேப்பு சான்றாய் மாறுகின்றார். அவனது வாழ்வில் வந்த கடின அனுபவங்கள், சிறைச்சாலை அனுபவங்களில் கர்த்தர் யோசேப்போடே இருந்தார் எனும் வார்த்தை தொடர்ந்து பலமுறை வருவதைக் காண இயலுகிறது.

அவனுக்குக் கர்த்தர் உடனிருந்து கொடுத்த ஞானம் அவனை மட்டுமல்ல அவன் குடும்பம், அவன் சகோதரர்கள், அவனது தேசத்தையே உயர்த்தியது.

"தேவனோ இப்பொழுது நடந்து வருகிறபடியே வெகுஜனங்களை உயிரோடே காக்கும்படி அதை நன்மையாக முடியப்பண்ணினார்" (ஆதி. 50:20). இறைவனால் அருளப்பட்ட ஞானத்தை உயர்த்தி நிற்கும் யோசேப்பை கண்டுகொள்ள முடிகிறது. கர்த்தருக்கு பயந்து கீழ்ப்படிந்து வாழ அழைக்கிறது.

நாம் யாவரும் சம்பூரணமாய் கொடுக்கிறவருக்கு பரிசுத்தமாய் நம்மை ஒப்புக்கொடுத்து, கீழ்ப்படிந்து, கர்த்தருக்குப் பயந்து வாழ வாழ்ந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்வோம். இறை ஆசி பெறுவோம்.

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**

**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## என்ன வந்தாலும்...



**மண்ணில்** : **1495**
**விண்ணில்** : **09-02-1555**
**ஊர்** : **சோமர்செட்**
**நாடு** : **இங்கிலாந்து**
**தரிசன பூமி** : **இங்கிலாந்து**

‘கர்த்தராகிய என் இயேசு கிறிஸ்துவே என் மேல் கிருபையாயிரும். கர்த்தராகிய என் இயேசு கிறிஸ்துவே என் மேல் கிருபையாயிரும். என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்’ இவை பேராயர் ஹீப்பரின் கடைசி வார்த்தைகள்.

16-ம் நூற்றாண்டு அது. இயேசு கிறிஸ்துவை பின்பற்றியதினிமித்தம், பலர் சிறையிலடைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டனர். ஆயினும் அவர்கள் விசுவாசம் அநேகமாயிரம் பேரை கிறிஸ்துவுக்குள் வளரச் செய்தது.

உண்மைக் கிறிஸ்தவர்கள் உயிரைக் கொடுத்தார்கள். பெயர் கிறிஸ்தவர்களை அது உயிரடையச் செய்தது. ஆவிக்குரிய வாழ்வில் தளர்ந்துபோன, விழுந்துபோன பலருடைய ஜீவியம் மீண்டும் தழைத்தோங்க இரத்தசாட்சிகளின் மரணம் அவர்களை உந்தித் தள்ளியது.

ஜான் ஹீப்பர் ஒரு பேராயர். போப்பின் தவறான கொள்கைகளுக்குத் தன் செவியைச் சாய்க்காமல், வேதத்தின் சத்தியத்தை தன் வாழ்க்கையின் ஆதாரமாகக் கொண்டு வாழ்க்கை நடத்தினார். இவர் போப்பின் ஆதிக்கத்தை எதிர்த்ததால் குற்றவாளி என தீர்ப்பிடப்பட்டு, சிரச்சேதத்திற்கு நியமிக்கப்பட்டார்.

அது ஒரு கொடூரமான நாள். ஹீப்பர் தன் உடலை இயேசுவின் நாம மகிமைக்காக சுட்டெரிக்கப்படுவதற்கு கொடுத்த நாள். சுமார் காலை 9 மணிவேளை, பட்டயங்களையும், ஈட்டிகளையும் சுமந்துகொண்டு, ஏராளமான சேவகர்கள் பின்தொடர, ஹீப்பரை பிடித்துக்கொண்டு வந்தனர். குருமார்கள் பலர் வேடிக்கைப் பார்த்தனர்.

ஹீப்பர் முழங்கால்களை முடக்கி, விண்ணகத் தந்தையோடு, மண்ணிலிருந்து வேண்டுதல் செய்தார். ஜெபித்து முடிந்ததும், தன் மேலங்கியைக் கழற்றி, தீ மூட்டும் இடத்திற்கு சென்றார். கட்டை ஈரமாக இருந்தபடியினால் அது எளிதில் பற்றவில்லை. கடைசியில் தீபற்றி அவர்கள் அருகில் வரும் சமயத்தில், அத்தீயின் நடுவே, ஆண்டவரே என்னை

ஏற்றுக்கொள்ளும் என்று அவர் கரங்களில் தன் ஆவியை ஒப்புவித்தார்.

அன்பரே! கிறிஸ்துவை மட்டுமே சேவிப்பதற்கு நீங்கள் ஆயத்தமா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு :** தேவன் என்னை அழைத்திருப்பதால் இந்த இடத்திலேயே என் ஆடுகளுடன் ஜீவிக்கவும், மரிக்கவும் ஆயத்தமாக இருக்கிறேன் - ஹீப்பர்

**குயவனின் கரங்களில் :** ஆண்டவரே! உமக்குள் வளர்ந்து உம்மிலே இணைய எனக்கு உதவிசெய்யும்.

**தியானத்திற்கு :** 2இரா. 6, புலம்பல் 2, 1கொரி. 15

## பாடலின் பின்னணியம்

### அருள்மாரி எங்குமாக

**(Lord I hear of Showers)**

**லூக்கா 19 : 10** **பாடல்: எலிசபெத் காட்னர்**

1. அருள்மாரி எங்குமாக
   பெய்ய, அடியேனையும்
   கர்த்தரே, நீர் நேசமாக
   சந்தித்தா சீர்வதியும்
   என்னையும், என்னையும்
   சந்தித்தாசீர்வதியும்.

"என்ன ஒரே குதூகலமாயிருக்கிறீர்கள்?"

"நாங்கள் லண்டனுக்கு விடுமுறை நாட்களை கழிக்கச் சென்றோமல்லவா டீச்சர்?"

"ஓ! அங்கே எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்த மகிழ்ச்சியா?"

"இல்லை டீச்சர், நாங்கள் அங்கே நடைபெற்ற தியான பயிற்சிக் கூட்டங்களில் கலந்து கொண்டோம். ஆண்டவரை எங்கள் சொந்த ரட்சகராக ஏற்றுக் கொண்டோம். அவர் எங்கள் உள்ளத்தில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் ஆசீர்வாதமாக பொழிந்துவிட்டார்".

தன்னிடம் கல்வி கற்கும் மாணவரின் ஆவிக்குரிய வாழ்க்கையைப் பற்றியும் மிகுந்த அக்கரை கொண்ட எலிசபெத் காட்னரின் காதுகளில் இச்செய்தி தேனாய் ஒலித்தது. ஆயினும், அவள் உள்ளத்தில் ஓர் ஏக்கம். "என்னிடம் கற்கும் மாணவர்கள் பலர் உண்டே, லண்டனுக்குச் சென்ற ஒரு சில மாணவர்கள் மட்டுமே, இந்த சிறந்த அனுபவத்தைப் பெற்றார்களே!

மற்றெல்லா மாணவரும் கூட இதைப்பெற வேண்டுமே,'' இந்த வாஞ்சையே, இப்பாடலை எழுத காட்னரைத் தூண்டியது.

''ஆண்டவரே, உம் அருள்மாரி எங்கும் பெய்கிறதெனக் கேள்விப்படுகிறேனே. அது இங்கேயும் பொழியட்டுமே!'' என்ற இப்பாடலின் வார்த்தைகள், அவளது இதய வாஞ்சையை வெளிப்படுத்துகிறதல்லவா?

தன் மாணவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கென காட்னர் எழுதிய இப்பாடலை, சிறந்த நற்செய்திப் பாடகரான சாங்கி, மூடிப் பிரசங்கியாரின் கூட்டங்களில் பாடிப் பிரபலமாக்கினார். அக்கூட்டங்களில் இப்பாடல் அநேக ஆத்துமாக்களை ஆண்டவருக்காக ஆதாயம் பண்ணியது.

பல ஆண்டுகளுக்குப்பின், அருள்திரு. கனோன் சுவோன் ஹேய் ஐட்கென் என்ற பிரபல மிஷனரி, லண்டனின் மேற்குப்பகுதியில் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தார். உல்லாச வாழ்க்கை நடத்தும் நாகரீக இளம் பெண்ணொருத்தி, மற்றவர்களின் வற்புறுத்தலால் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டாள். பிரசங்கியாரின் உருக்கமான வேண்டுதல்களும், அழைப்பும் அவள் உள்ளத்தை சிறிதளவும் அசைக்கவில்லை.

செய்தி முடிந்தவுடன், ஆராதனை முடிவின் கலந்துரையாடலில் பங்கேற்க அவள் விரும்பவில்லை. எனவே, ஆலயத்திலிருந்து வெளியேற எழுந்தாள். ஆனால், ஆலயம் நிரம்பி வழிந்து, நடைபாதையிலும் மக்கள் கூட்டமாக நிறைந்திருந்ததால், வாயிலை நோக்கி அவளது பயணம் மிகவும் மெதுவாகவே முன்னேறியது. அதற்குள் பாடகர்குழு இப்பாடலை பாட ஆரம்பித்தது. மெதுவாக போய்க்கொண்டிருந்த அந்தப் பெண்ணை, இப்பாடல் மிகவும் கவர்ந்தது. திரும்பத்திரும்ப வந்த ''என்னையும்'' என்ற வார்த்தை, அவள் உள்ளத்தை தொட்டது.

இப்பாடல் அவளுக்கு புதிதாக இருந்ததால், அப்பாடலின் வரிகளைத் தன் கையிலிருந்த பாடல் புத்தகத்தில் வாசித்துக்கொண்டே வந்தாள். ஆலய வாசலை அவள் நெருங்கும்போது, பாடலின் கடைசி சரணத்தை பாடகர் குழு பாடியது. திடீரென்று பாடலில் கூறப்பட்டுள்ள காணாமற்போன நபர் நான் தானே, என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் எழுந்தது. போகும் வழியெல்லாம், அவள் வீடு செல்லும்வரை, ''திக்கில்லா இவ்வேழையேனை, கைவிடாமல்'' என்ற வார்த்தைகள் அவள் உள்ளத்தில் தொனித்துக் கொண்டே இருந்தன. இவ்வார்த்தைகளே, பின்னர் அவள் தனிமையில் தன் படுக்கையறையில் படுத்திருந்தபோது, அவளது தேம்பி அழும் ஜெபமாக மாறியது.

அப்போது, ''இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவுமே, இயேசு உலகத்தில் வந்தார்'' என்கிற வேதவசனம் (லூக்கா 19:10), அவளுடைய

நினைவில் தோன்றியது. அன்றிரவு தூங்குமுன்பே, அவள் இயேசுவையும், அவரது அன்பையும் ஏற்றுக்கொண்டாள். அன்றிரவே, கிறிஸ்துவுக்குள் அவளது புதுவாழ்வு மலர்ந்தது.

**பாடகர் குழு – C.S.I Tamil Church Oman (நன்றி: அமைதி நேர ஊழிய வெளியீடு)**

## பெண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – அக்டோபர் 2019




இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

அக்டோபர் மற்றும் இந்த வருடத்தின் இறுதி பெண்கள் சங்க கூடுகை 17-ம் தேதி C.S.I Malayalam hall-ல் வைத்து இரவு 9 மணிக்கு போதகர் அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பமானது. முதலாவதாக நமது பெண்கள் சங்கத்தின் ஆண்டுத்தேர்வை போதகர் அவர்கள் நடத்தி தந்தார்கள். போதகர் அவர்களுக்கு பெண்கள் ஐக்கியத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைத் தொடர்ந்து வர இருக்கிற பெண்கள் ஆராதனையில் பெண்கள் ஐக்கிய சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கான பகுதியினை போதகர் அவர்கள் பகிர்ந்தளித்து விவரித்துக் கூறினார்கள். பின்னர் திருமதி. ஷைனி ஜோகன் அவர்களின் கீபோர்டு இசைக்கருவி வாசிப்புடன் பெண்கள் ஆராதனையின் சிறப்புப் பாடல் பயிற்சி செய்யப்பட்டது. அதன்பின் போதகர் அவர்களின் நிறைவுஜெபத்துடன் பெண்கள் சங்கமானது 11 மணியளவில் இனிதே நிறைவுபெற்றது.

இறுதியில் Sponsor செய்த Mrs. Mahizha Jenkin மற்றும் பெயர் சொல்ல விரும்பாத ஒரு சகோதரி அவர்கள் சார்பில் சிற்றுண்டி வழங்கப்பட்டது. அவர்கள் குடும்பங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வருடம் முழுவதும் பெண்கள் ஐக்கிய சங்கம் தொடர்ந்து நடைபெறவும், நமது ஜெபங்கள் எல்லாவற்றிற்கும் பதிலளித்தும், நம்மை காத்து வழிநடத்திய நம் தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோமாக. வருகிற ஆண்டில் நமது சபையின் பெண்களாகிய நாம் அனைவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி. சாரா ராஜாசிங்**
**பெண்கள் ஐக்கிய சங்க செயலர்**

**அறிவிப்புகள் :** 01-11-2019 – பெண்கள் சங்க சிறப்புத் தொழுகை
22-11-2019 – பெண்கள் சங்க ஆண்டுவிழா

# ஆண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – அக்டோபர் 2019




ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

ஆண்டவரின் மகா கிருபையால் நமது சபையின் ஆண்கள் சங்கமானது 17-10-2019 இரவு 9 மணிக்கு திரு. ராபின் தேவதாஸ் அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பமானது. ஆவிக்குரிய பாடல்களை பாடி நன்றி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. பின்பு பிலிப்பியர் 4:1-13 வரை ஆளுக்கு ஒரு வசனம் வாசிக்கப்பட்டது. அந்த வசனங்களின் அடிப்படையில் திரு. தன்ராஜ் அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையை பகிர்ந்துகொண்டார்கள்.

1. கிறிஸ்து என்னுள் இருப்பதால் எல்லாவற்றையும் செய்யமுடியும் என்ற நம்பிக்கையை ஊட்டினார்கள்.

2. இயேசு கிறிஸ்து பெலப்படுத்துகிறவராக இருக்கின்றார்.

பெலவீனத்தில் பெலப்படுத்தும் கிறிஸ்து சோர்ந்துபோகிற வேளைகளில் பெலன்தருகிற இயேசு, ஆவிக்குரிய பிரகாரமாக நாம் வாழும்போது ஆண்டவரின் பெலன் கிடைக்கும். நியாயாதிபதிகள் 6:14-ல் சிம்சோன் ஆவியிலே களிகூர்ந்து ஒருவிசை இரங்கும் என்று வேண்டுதல் செய்தபோது அவனுக்கு பெலனை கொடுத்த ஆண்டவர் நமக்கும் பெலன் தருவார். அருமையான அந்த வார்த்தைகள் ஒவ்வொருவரின் உள்ளத்தையும் தொட்டது. அனைவருக்கும் செய்தி ஆசீர்வாதமாக அமைந்தது.

சாட்சி வேளையில் அநேகர் சாட்சி கூறினார்கள். கூடவே திரு. தன்ராஜ் அவர்கள் இந்த தேசத்தில் ஆண்டவருக்கு செய்த, ஆண்கள் சங்கத்திற்கு ஆற்றிய பணிகளைக் குறித்தும் சாட்சி பகிரப்பட்டது. திரு தன்ராஜ் அவர்கள் இம்மாதம் இந்த தேசத்தில் இருந்து பணிநிறைவுப்பெற்று செல்லுகிறார். அவர்களை ஆண்கள் சங்கத்தின் சார்பில் அன்போடு வாழ்த்தி வழியனுப்புகிறோம். அவர்கள் குடும்பம் ஆண்டவரால் ஆசிபெற்று வாழ இறைவனை வேண்டுகிறோம். அந்நாளின் கூடுகை இறுதியாக அவர்கள் ஜெபத்துடன் நிறைவடைந்தது. அனைவருக்கும் ஆசீர்வாதமாய் அமைந்தது.

இந்தமாத கூடுகையை தாங்கியவர்கள் : Mr. Benny Moses & Mr. Michael

உணவு வழங்கியவர்கள் : Mr. V. N. Rajan

அவர்களுக்கு ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பாக நன்றியைக் கூறுகிறோம்.

தொடர்ந்து நமது சபையின் ஆண்கள் அனைவரும் ஆண்கள் ஐக்கிய சங்கத்தில் கலந்துகொண்டு தேவாசீர்வாதத்தை பெற்றுச்செல்ல அன்புடன் அழைக்கிறோம்.

**திரு. சைலஸ்**
**ஆண்கள் ஐக்கிய சங்க செயலர்**

**அறிவிப்பு** : 08-11-2019 அன்று மாலை 4:45 மணி திருவிருந்து தொழுகையைத் தொடர்ந்து ஆண்கள் சங்க விற்பனைவிழா நடைபெறும். அனைவரும் பங்களிப்பு தர அன்பாய் கேட்கிறோம்.

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ நவம்பர் 2019

| | | |
|---|---|---|
| 01-11-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Women's Fellowship |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Women's Fellowship |
| 08-11-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Christy Sterbie Ramji |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Johnson Raj |
| 15-11-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Deena Sujin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jones |
| 22-11-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Women's Fellowship |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Women's Fellowship |
| 29-11-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Bible School Teacher |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Bible School Teacher |
| 06-12-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Choir Member |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Choir Member |

## *New Arrivals*

**“பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்”**



**Miss. Joylin Angel**

**D/o Mr. C. Jenil Singh & Mrs. Amutha**

**03-09-2019**

## நவம்பர் 2019 மாத கேள்விகள்

## (சங்கீதம் 63 - 72 வரை)

1. கர்த்தருக்குள் மகிழ்ந்து அவரை நம்புகிறவன் யார்?
2. பூமி எதை தரும்?
3. நிணத்தையும், கொழுப்பையும் உண்டதுபோல் திருப்தியாவது எது?
4. தேவனுக்கு முன்பாக அசைந்த மலை எது?
5. நாள்தோறும் கர்த்தரின் நீதியைக் கொண்டாடுவது எது?
6. இருதயத்தை பிளந்தது எது?
7. யார் நரிகளுக்கு இரையாவார்கள்?
8. தேவபர்வதம் எப்படி இருக்கிறது?
9. தேவன் எதை விசாரித்து, அதற்கு நீர்பாய்ச்சுகிறார்?
10. எதை புடமிடுகிறதுபோல எங்களை புடமிட்டீர்?
11. ஒரு பிடி தானியம் எங்கு விதைக்கப்பட்டிருக்கும்?
12. மரணத்திற்கு நீங்கும் வழிகள் யாரிடம் உண்டு?
13. யார் உமக்கு இச்சகம்பேசி அடங்குவார்கள்?
14. வெகுமானங்களை கொண்டுவரும் ராஜாக்கள் யார்?
15. தலைமயிரிலும் அதிகமாக இருக்கிறவர்கள் யார்?
16. துன்மார்க்கர் எதை பட்டயத்தைப்போல் கூர்மையாக்குகிறார்கள்?
17. தானியத்தால் மூடியிருப்பது எது?
18. பரிசுத்த வாசஸ்தலத்தில் இருக்கிற தேவன் யாருக்கு தகப்பன்?
19. யுத்தங்களில் பிரியப்படுகிற ஜனங்களை தேவன் என்ன செய்வார்?
20. சந்திரனுள்ளவரைக்கும் மிகுந்து இருப்பது எது?

## அக்டோபர் 2019 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. அந்தி, சந்தி மத்தியானவேளை – சங்கீதம் 55:17
2. கிருபையும், சத்தியமும் - சங்கீதம் 57:10
3. பழிவாங்குதலை – சங்கீதம் 58:10
4. என் இருதயம் தொய்யும்போது – சங்கீதம் 61
5. அக்கிரமக்காரர்கள் - சங்கீதம் 53:4
6. இரத்தப்பிரியரும் சூதுள்ள மனுஷரும் - சங். 55:23
7. இருதயத்தை – சங். 62:10

8. துருத்தியில் - சங். 56:8
9. களிப்பும், மகிழ்ச்சியும் - சங். 53:6
10. கொடி – சங். 60:4
11. கிருபை – சங். 63:3
12. கீழ்மக்களும், மேன்மக்களும் - சங். 62:9
13. சத்துருக்களுக்கு – சங். 54:5
14. எப்பிராயீம் - சங். 60:7
15. விக்கினங்கள் கடந்துபோகுமட்டும் - சங். 57:1
16. பட்டயம் - சங். 59:7
17. பயப்படும் நாளில் - சங். 56:3
18. நீதிமான் - சங். 55:22
19. துன்மார்க்கன் - சங். 58:3
20. புறா – சங். 55:6

**அக்டோபர் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்**

| | | |
|---|---|---|
| Mrs. Aspin Bejo | Mrs. Leela Gladson | Mrs. Sapthekha Jerry Sathya |
| Mrs. Boopathi Baskar | Mrs. Manju Martin | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Felsi Rani John | Mrs. Nisha Rajan | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Percy Jean | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Shiney Johan |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Pushpa Rani Moorthy | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Juslin Jaslin | Mrs. Regin Justa Vinolin | Mrs. Virgin Jegatha Jino |

## ஆண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 65

**நவம்பர் 2019 மாத கேள்விகள்**
**(2 நாளாகமம் 21 முதல் 30 வரை)**

1. வெள்ளாண்மை பிரியன் யார்?
2. அகசியாவின் தாய் யார்?
3. எசேக்கியா ராஜாவின் காலத்தில் எத்தனை நாளில் கர்த்தருடைய ஆலயத்தை பரிசுத்தம்பண்ணி முடித்தார்கள்?
4. யோராம் ராஜாவாகிறபோது எத்தனை வயதாயிருந்தான்?
5. சிக்ரியின் குமாரன் யார்?
6. உசியாவுக்கு காணிக்கைகளை கொடுத்தது யார்?
7. ஏழு வயதில் ராஜாவானது யார்?

8. இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை எத்தனை நாள் ஆசரித்தார்கள்?
9. ஆகாஸின் தகப்பன் யார்?
10. யோசபாத்தின் சேஷ்டபுத்திரன் யார்?
11. அமத்சியா எந்த பள்ளத்தாக்கில் சேயீர் புத்திரரில் பதினாயிரம் பேரை வெட்டினான்?
12. அகசியா ராஜா துன்மார்க்கமாய் நடக்க ஆலோசனைக்காரியாய் இருந்தது யார்?
13. பேரீச்சமரங்களின் பட்டணம் எது?
14. யோய்தா மரணமடையும்போது எத்தனை வயதுடையவனாய் இருந்தான்?
15. நெற்றியில் குஷ்டரோகம் பிடித்தவன் யார்?
16. குடல்நோயினால் செத்துப்போன ராஜா யார்?
17. யோசேபியாத் களவாயெடுத்த யோவாசை எத்தனை வருஷம் கர்த்தருடைய ஆலயத்தில் ஒளித்து வைத்தான்?
18. எசேக்கியா பஸ்காவை ஆசரிக்க கர்த்தருடைய ஆலயத்திற்கு வரும்படி யாருக்கு நிருபங்களை எழுதினான்?
19. ஒரே நாளில் லட்சத்திருபதினாயிரம் பேரைக் கொன்றவன் யார்?
20. கர்த்தர் ஆகாபின் குடும்பத்தாரைச் சங்கரிக்க அபிஷேகம் பண்ணுவித்த நிம்சியின் குமாரன் யார்?

## அக்டோபர் 2019 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. கிபியா – 2நாளா. 13:2
2. அசரியா – 2நாளா. 15:1
3. யோகனான் - 2நாளா. 17:15
4. ஆகாப் - 2நாளா. 18:3,29
5. இம்லா – 2நாளா. 18:7-8
6. ஆசா – 2நாளா. 16:12
7. கெனானாவின் குமாரனாகிய சிதேக்கியா – 2நாளா. 18:23
8. அனானியின் குமாரன், ஞானதிருஷ்டிக்காரன் - 2நாளா. 19:2
9. அசுபாள் - 2நாளா. 20:31
10. செபதியா – 2நாளா. 9:11
11. சாலொமோனின் குமாரன் - 2நாளா. 11:3
12. கீதரோன் - 2நாளா. 15:16
13. 41 – 2நாளா. 12:13

14. கர்த்தரைத் தேடாதவன் எவனோ அவன் - 2நாளா. 15:13
15. மரேசா – 2நாளா. 20:37
16. வீணர் - 2நாளா. 13:7
17. சீஷாக் - 2நாளா. 12:2
18. அப்சலோம் - 2நாளா. 11:20-21
19. ஆசா – 2நாளா. 14:11
20. யெரொபெயாம் - 2நாளா. 13:20

**அக்டோபர் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்**

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Kanagavel |
| Mr. Bejo Nelson | Mr. Prince J. P. |
| Mr. David Prabhakaran | Mr. Rajan V. N. |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Ramesh |
| Mr. Jean C. R. Shibin | Mr. Robin Devadhas |
| Mr. Jino John | Mr. Sylus |
| Mr. Johan Pratheep | |

## ஜெபிக்க சில குறிப்புகள்

**திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- நமது திருச்சபை போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழுவுக்காகவும், அவர்கள் தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிடவும் ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.

- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், பேராயங்களுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், பேராயர், போதகர்கள் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.
- நமது பேராயத்தின் பேராயர் Rt. Rev. Dr. செல்லையா அவர்கள் இறைபணி மூலம், இறை சித்தம் நிறைவேற்றும் பேராயராய் செயல்பட்டு, பேராயம் நல்ல முறையில் இயங்கவும், இறையருள் வேண்டி மன்றாடுவோம்.

**மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- தேசத்தலைவர்களுக்காகவும், அரசு அதிகாரிகளுக்காகவும், அதிகாரத்திலுள்ள அனைவரும் நேர்மையும் பயனுள்ள வகையிலும் ஆளுகைசெய்ய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இன்றைய நம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அரசு சலுகைகளை, உரிமைகளைக்கூட சரிவர பெறமுடியாதச் சூழலில், ஊழல் என்னும் தீமை அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- மது என்னும் தீமை இன்றைய சமுதாயத்தையும், குடும்பத்தையும், தனிமனித வாழ்வையும் பெரிதும் பாதித்துவரும் சூழலில் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.

- வாழ்வில் குறுக்கிடும் துன்பம், தோல்வி, நோய், கடன்பாரம் போன்றவைகளுக்கு தீர்வு தற்கொலையே என்கிற முடிவில் பலர் தங்களுக்கு ஆண்டவர் ஈவாக தந்த உயிரை தாங்களே அழித்து வருகின்றனர். குறிப்பாக இளம் தலைமுறையினரே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துவரும் சூழலில், தற்கொலை என்னும் தீமை முழுமையாக அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- வேலையின்றி வாடுவோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க அரசு புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இந்திய தேசத்தின் பொருளாதார வீழ்ச்சி நிலைமாற மன்றாடுவோம்.

**குடும்பங்களுக்காக ஜெபிக்க:-**

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.
- வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.
- கருவுற்றிருக்கிற சகோதரிகளின் உடல்நலத்திற்காகவும், சுகமான விடுதலைக்காகவும், தாய் சேய் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.

## இறைவன் ஏற்கும் வாழ்வு

**1. நீதியாய் வாழ்தல்:-**

கடவுள் நீதியுள்ளவர்; தம்மால் படைக்கப்பட்ட அனைவரும் நீதியாய் வாழ கடவுள் விரும்புகிறார். எல்லா சமயங்களும் நீதியை வலியுறுத்துகின்றன. ஆயினும் மனிதர்கள் நீதியோடு வாழ்கின்றார்களா? என்ற கேள்விக்கு, இல்லை என்பதிலும் சுயநலமும் முன்நிற்கிறது என்ற விடையும் கிடைக்கும்.

யாக்கோபு நிருபத்தின் முக்கியக் கருத்து, கிறிஸ்தவர் ஒருவர் தம் அன்றாடக் கடமைகளைப் பிழையின்றிச் செய்துமுடிக்க வேண்டும் என்பதே. இந்நிருபத்தை உலகெங்கும் சிதறுண்டு வாழும் இஸ்ரவேலின் பன்னிரு குலத்தினருக்கும் யாக்கோபு எழுதுகிறார்.

யாக்கோபு 5-ல் செல்வர்கள் தங்கள் வயலில் அறுவடை செய்த வேலையாள்களுக்குரிய கூலியைப் பிடித்துக்கொண்டு அநீதி செய்கிறார்கள்.

நீங்கள் ஆடம்பரமாக வாழ ஏழை எளியோரின் உழைப்பை சுரண்டுகிறீர்கள். தங்கள் மூதாதையரின் சட்டங்களில் ஒன்றான உபாகமம் 24:15-ன் படி நடக்க தவறினீர்கள் என்றும், ஏழைகளுக்கு அநீதி செய்தால் கடவுள் உங்களுக்கு தண்டனை வழங்க நேரிடும் என்றும் எச்சரிக்கிறார்.

இன்றைய சூழலில் ஏழை எளிய மக்களின் உயர்வில் கரிசனை இல்லாமல் இவர்களை சுரண்டுபவர்கள் ஏராளம். தமக்குக் கீழுள்ள மக்களைப் பயன்படுத்தி அநீதி செய்து வாழ்வோர் நன்மை தீமை இன்னதென்று கடவுள் கற்றுக்கொடுத்தும் அதற்கு முரணாக செயல்படுவோர் பலர். நசுக்கப்பட்ட ஏழைகளின் குரலோ ஆண்டவரை நோக்கி வேண்டிக்கொண்டே இருப்பதால் அநீதி செய்த இவர்கள் காலம் தளரும். நண்பர்களே! வாழும் வாழ்வில் நாம் நீதியாய் வாழ்ந்து ஆண்டவருக்கும் பிறருக்கும் ஏற்புடையவர்களாய் இருப்போம்.

## 2. தூய வார்த்தைகளைப் பேசுதல்:-

வார்த்தைகள் இருவிதம். நல்ல வார்த்தை, தீய வார்த்தை எனப்படும். நாவினால் சுட்ட வடு ஆறாது என்பது வள்ளுவர் கூற்று. ஒவ்வொரு மனிதரும், தனக்கு இதமான நல்வார்த்தைகளையே பேசக் கேட்பதை விரும்புகின்றனர். காந்தியடிகள் கூட தனது கொள்கை பதிவுகளில் தீயவை பேசாதே என்பதை குரங்கு பொம்மை மூலம் அடையாளப்படுத்தியுள்ளார். இறைவாக்கினர் செப்பனியா இப்பகுதியில் எருசலேமின் சீர்கேடுகளையும், உரிமை மீறல்களையும் சுட்டிக்காட்டுகிறார். எருசலேமின் இவைாக்கினர் வீண்பெருமை பேசும் வஞ்சகமிக்க மனிதர் என்று சாடுகிறார். இறுதியில் கடவுளின் இரக்க காலத்தில் அவர்களுக்கு கடவுள் தூய நாவினை அருள்வேன் என கூறுகிறார். ஆண்டவரது இறைவார்த்தைகளை தியானிக்கும் ஒவ்வொருவரும் தூய வார்த்தைகளை பேசுவது அவசியம் ஆகும். நாம் பேசும் வார்த்தையின் வேகத்தையும், விளைவையும் நாம் அறிந்து பேசவேண்டும். நமது பேச்சுகள் பிறரை புண்படுத்துகிறதா? என்பதை அறிந்து பேசவேண்டும். அன்று கடவுளின் அழைப்பு தன்னை சந்தித்தபோது ஏசாயா, ‘ஐயோ, நான் அழிந்தேன், ஏனெனில் தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான்’ என தனது பாவநிலையை உணர்ந்து அறிக்கை செய்தார். கடவுளின் உறவிலே இருக்கும்போது தீயவார்த்தைகளை விடுத்து நல்ல வார்த்தைகளையே பேசவேண்டும் என்ற சிந்தனையை ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் தருகிறது. சங்கீத ஆக்கியோன் 34:1-ல் ஆண்டவனை நான் எக்காலமும் போற்றுவேன்; அவரது புகழ் எப்பொழுதும் என் நாவில் ஒலிக்கும் என்கிறார். இறையடி அமர்ந்து தியானிக்கும் நமது நாவில் தூயவரைப் போற்றும் தூய வார்த்தை உள்ளதா? சிந்திப்போம், செயல்படுத்துவோம்!

## 3. வஞ்சனையில்லா வாழ்வு:-

யோசுவா கானான் நாட்டை ஒவ்வொருவருக்கும் பங்கிட்டு கொடுக்கும்போது இது கடவுள் உங்களுக்கு தந்த உரிமையான சொத்து, யாரும் யாருடைய சொத்தையும் அபகரிக்ககூடாது என்றார். இஸ்ரவேலில் இருப்பது கடவுளின் சட்டம் அதைத்தான் அரசர் ஆகாப் கடைபிடிக்கவேண்டும். ஆனால் அவரோ அதை மறந்து தன் அரண்மனையின் அருகில் வாழ்ந்து வந்த ஏழை நாபோத்தின் தோட்டத்தை, மாற்றுத் தோட்டத்தைக் கொடுத்தோ அல்லது விலைக்கிரயமாகவோ பெற்றுக்கொள்ள துடிக்கிறான். ஆகாபின் எண்ணத்தை அறிந்த நாபோத் எந்தவித வஞ்சனை இல்லாமல் என் பிதாக்களின் உரிமையைத் தரமாட்டேன் என்கிறான். ஆகாபின் மனைவி யேசபேல் வஞ்சனையோடு நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை அபகரிக்கிறாள். இவர் தீர்சீதோன் நாட்டை சார்ந்தவள். பாகால் தெய்வத்தை வணங்குபவள்.

பாகால் செழுமையின் கடவுள் பிறரின் சொத்தை அபகரிப்பதை பாகால் வழிபாடு நியாயப்படுத்துகிறது. ஆனால் யாவே நீதியின் கடவுள் ஏழைகளின் நீதியை விரும்பும் கடவுள். நீதியின் கடவுளின் திருவுளப்படி நாட்டை ஆளவேண்டிய அரசன் தன் மனைவியின் செயலுக்கு அடிபணிந்து யாவேயின் நீதியை மறந்துவிடுகிறான். ஆனால் யாவேயின் நீதியை அறிந்து நாபோத் தனக்குக் கடவுள் நீதி வழங்குவார் என்ற நம்பிக்கையோடு வஞ்சனையில்லா வாழ்வில் நிலைத்திருக்கிறார்.

அதிகாரவர்க்கமும், ஆளும்வர்க்கமும் வஞ்சனையில்லாத ஏழைகள் ஏமாற்றப்பட்டாலும், கடவுள் அவர்களுக்கு நீதி செய்கிறார். வஞ்சனையில்லா வாழ்வு வாழ்ந்து கடவுளின் நீதியை நிலைநாட்டுவோம்.

**- V. G. மஹிமா ஜெங்கின் ராஜ்**

# அனுதின மன்னா – நவம்பர் 2019

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி தரப்பட்டுள்ளது. வாசித்து, தியானித்து குடும்ப ஜெபத்தில் பயன்படுத்துங்கள். ஓராண்டில் திருமறைப்பகுதியை தனி ஜெபத்தில் தியானித்து பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| **நவம்பர் 1** | **வெள்ளி** | **ஆதி. 6:9-12** | **ஆதி. 6:18** | **யோவான் 20-21** |
| நவம்பர் 2 | சனி | ஆதி. 15:7-21 | ஆதி. 15:21 | அப். 1-2 |
| நவம்பர் 3 | ஞாயிறு | 2கொரி. 3:1-11 | 2கொரி. 3:6 | அப். 3-4 |
| நவம்பர் 4 | திங்கள் | யாத். 19:1-9 | யாத். 19:5 | அப். 5-6 |
| நவம்பர் 5 | செவ்வாய் | 2நாளா. 21:1-20 | 2நாளா. 21:7 | அப். 7-8 |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| நவம்பர் 6 | புதன் | லேவி. 26:14-26 | லேவி. 26:15 | அப். 9-12 |
| நவம்பர் 7 | வியாழன் | எசேக். 34:11-31 | எசேக். 34:25 | அப். 13-15 |
| **நவம்பர் 8** | **வெள்ளி** | **லேவி. 26:39-46** | **லேவி. 26:42** | **அப். 16-17** |
| நவம்பர் 9 | சனி | ஏசா. 42:1-9 | ஏசா. 42:7 | அப். 18-19 |
| நவம்பர் 10 | ஞாயிறு | ஆதி. 9:1-17 | ஆதி. 9:13 | அப். 20-23 |
| நவம்பர் 11 | திங்கள் | யாத். 20:1-17 | யாத். 20:6 | அப். 24-26 |
| நவம்பர் 12 | செவ்வாய் | உபா. 7:11-15 | உபா. 7:15 | அப். 27-28 |
| நவம்பர் 13 | புதன் | எசேக். 37:15-28 | எசேக். 37:26 | ரோமர் 1-3 |
| நவம்பர் 14 | வியாழன் | ஏசாயா 55:1-13 | ஏசா. 55:3 | ரோமர் 4-7 |
| **நவம்பர் 15** | **வெள்ளி** | **லேவி. 24:1-9** | **லேவி. 24:8** | **ரோமர் 8-10** |
| நவம்பர் 16 | சனி | எபி. 13:20-21 | எபி. 13:20 | ரோமர் 11-13 |
| நவம்பர் 17 | ஞாயிறு | யாத். 31:12-18 | யாத். 31:16 | ரோமர் 14-16 |
| நவம்பர் 18 | திங்கள் | உபா. 7:1-10 | உபா. 7:9 | 1கொரி. 1-3 |
| நவம்பர் 19 | செவ்வாய் | சங். 25:11-22 | சங். 25:14 | 1கொரி. 4-6 |
| நவம்பர் 20 | புதன் | ஆதி. 17:1-8 | ஆதி. 17:4 | 1கொரி. 7-9 |
| நவம்பர் 21 | வியாழன் | ஆதி. 17:15-22 | ஆதி. 17:21 | 1கொரி. 10-12 |
| **நவம்பர் 22** | **வெள்ளி** | **யாத். 6:1-9** | **யாத். 6:4** | **1கொரி. 13-14** |
| நவம்பர் 23 | சனி | 2நாளா. 6:12-17 | 2நாளா. 6:14 | 1கொரி. 15-16 |
| நவம்பர் 24 | ஞாயிறு | ரோமர் 11:25-36 | ரோமர் 11:27 | 2கொரி. 1-3 |
| நவம்பர் 25 | திங்கள் | 1பேதுரு 3:12-22 | 1பேதுரு 3:21 | 2கொரி. 4-6 |
| நவம்பர் 26 | செவ்வாய் | எரே. 32:36-44 | எரே. 32:38 | 2கொரி. 7-9 |
| நவம்பர் 27 | புதன் | எபி. 8:1-13 | எபி. 8:13 | 2கொரி. 10-11 |
| நவம்பர் 28 | வியாழன் | எரே. 31:31-34 | எரே. 31:31 | 2கொரி. 12-13 |
| **நவம்பர் 29** | **வெள்ளி** | **மத். 26:20-30** | **மத். 26:28** | **கலா. 1-2** |
| நவம்பர் 30 | சனி | ஏசா. 61:1-11 | ஏசா. 61:8 | கலா. 3-4 |
| டிசம்பர் 1 | ஞாயிறு | மத். 5:1-16 | மத். 5:16 | கலா. 5-6 |
| டிசம்பர் 2 | திங்கள் | சங். 119:105-112 | சங். 119:105 | எபேசி. 1-2 |
| டிசம்பர் 3 | செவ்வாய் | ஏசாயா 60:1-14 | ஏசா. 60:3 | எபேசி. 3-4 |
| டிசம்பர் 4 | புதன் | ஆதி. 18:1-15 | ஆதி. 18:9 | எபேசி. 5-6 |
| டிசம்பர் 5 | வியாழன் | லூக் 21:7-19 | லூக் 21:19 | பிலிப். 1-2 |
| **டிசம்பர் 6** | **வெள்ளி** | **2தீமோ. 1:8-14** | **2தீமோ. 1:12** | **பிலிப். 3-4** |

# May God Bless All

## Birthday Celebrants – November 2019

| | |
|---|---|
| 01st November | Mr. Justus Martin |
| 01st November | Mr. Johan Pratheep |
| 03rd November | Mrs. Dyana Angel Thangam, W/o Mr. Nethaji Jacob Durai |
| 05th November | Mr. Jerin |
| 06th November | Mr. T. N. Brejin |
| 07th November | Mrs. Jenelia, W/o Mr. Dhinakaran |
| 08th November | Mr. Pushpakaran |
| 09th November | Miss. Nita Jane, D/o Mr. Prem Meshach |
| 10th November | Master. Aeerick Faben, S/o Mr. Pratheesh |
| 13th November | Mrs. Jeyaselvi, W/o Mr. Jose Chandra Bose |
| 13th November | Miss. Fanny Santa, D/o Mr. Gnanadhas |
| 13th November | Mr. Praveen Jebasingh |
| 14th November | Mr. J. P. Prince |
| 16th November | Miss. Fiona Gen Mayshack, D/o Mr. Meshac |
| 19th November | Mrs. Sheeba, W/o Mr. Edward Sam |
| 21st November | Mr. M. George |
| 21st November | Miss. Jeslin Ninita, D/o Mr. Ennesar Jesupaul |
| 22nd November | Mrs. Pushpa Rani, W/o Mr. Moorthy |
| 22nd November | Mr. Paul Pratheeban |
| 23rd November | Mrs. Nancy Gifta Karthik, D/o Mr. Dhanaraj |
| 24th November | Miss. Joselin Jenifer, D/o Mr. Selvamoni |
| 28th November | Miss. Sheryl Heidi, D/o Mr. Gnana Ruban |
| 29th November | Mr. Prem Meshach |
| 30th November | Miss. Jovita, D/o Mr. Victor Thayasingh |

# Wedding Day Anniversaries – November 2019

| | |
|---|---|
| 07th November | Mr. Kasi Raja & Mrs. Divya Darling |
| 10th November | Mr. Jenil Singh & Mrs. Amutha |
| 11th November | Mr. George & Mrs. Latha |
| 13th November | Mr. Aruldhas & Mrs. Geetha |
| 15th November | Mr. Jino Retna Kumar & Mrs. Sujatha Shalini |
| 15th November | Mr. Livingston & Mrs. Jeny Sharlin |
| 16th November | Mr. Kovilpillai & Mrs. Daisy |
| 16th November | Mr. Lenin & Mrs. Ida Shanthi Priya |

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 01-11-2019 | வெள்ளி - அருணோதய ஆராதனை<br>இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00–6:00 |
| 01-11-2019 | வெள்ளி- பெண்கள் சங்க சிறப்புத்தொழுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 07-11-2019 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 08-11-2019 | வெள்ளி- பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 09-11-2019 | சனி – உபவாச ஜெபக் கூட்டம்<br>இடம் : மார்த்தோமா ஹால் / காலை 10:30–1:00 |
| 15-11-2019 | வெள்ளி ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 22-11-2019 | வெள்ளி - பெண்கள் ஐக்கிய சங்க ஆண்டுவிழா<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 29-11-2019 | வெள்ளி – திருமறைப்பள்ளி ஆண்டுவிழா<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 01-12-2019 | ஞாயிறு - அருணோதய ஆராதனை<br>இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00–6:00 |
| 06-12-2019 | வெள்ளி – கிறிஸ்மஸ் கீத ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**
**Land Line : 2470 5784**
**E-mail : csitco@gmail.com**
**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**